Kanchipuram District

# முதலாம் திருப்புதல் தேர்வு - 2024

**B**

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : [ ][ ][ ][ ][ ][ ]

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

### பகுதி - அ

20 × 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இறுதி சரக்கிருப்பு என்பது ஓர்

அ) கற்பனைச் சொத்து ஆ) நிலையான சொத்து

இ) புலனாகாச் சொத்து ஈ) நடப்புச் சொத்து

2. காசோலை மூலம் சம்பளம் வழங்கியது ₹3000 என்பதைக் குறிப்பேட்டுப் பதிவில் வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கின் பெயர்

அ) வங்கி ஆ) சம்பளக் க/கு இ) எடுப்பு க/கு ஈ) ரொக்கக் க/கு

3. நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது

அ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்

ஆ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்

இ) ஆண்டு தோறும் மாறக்கூடியது

ஈ) ஆண்டுதோறும் குறையும்

4. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது

அ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்

ஆ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்

இ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

ஈ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்

5. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது

அ) முழு விடு பிழை ஆ) பகுதி விடு பிழை

இ) இருமுறை பதிந்த பிழை ஈ) விதிப்பிழை

6. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் ______ அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.

அ) இறுதியில் ஆ) மத்தியில் இ) ஆரம்பத்தில் ஈ) இவைகளில் ஏதுமில்லை

7 நடப்பு ஆண்டின் ஒரு பேரேட்டுக் கணக்கின் இறுதி இருப்பு ______ தொடக்க இருப்பாகும்.

அ) கடந்த ஆண்டு ஆ) அடுத்த ஆண்டு இ) நடப்பு ஆண்டு ஈ) இவற்றில் ஏதுமில்லை

8. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினைக் கண்டறியும் வழிமுறையை ______ என அழைக்கலாம்.

அ) குறிப்பேட்டில் பதிதல் ஆ) கூட்டுதல்

இ) இருப்புக் கட்டுதல் ஈ) எடுத்தெழுதுதல்

9. குறிமுறைகள் மற்றும் நிரல்கள் எழுதுபவர்கள் ______ என அழைக்கப்படுகின்றனர்.

அ) அமைப்பு பகுப்பாய்வாளர்கள் ஆ) அமைப்பு வடிவமைப்பாளர்கள்

இ) அமைப்பு இயக்குபவர்கள் ஈ) அமைப்பு நிரலாளர்கள்

10. சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கப்படும் செலவு ______.

அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவு ஆ) மேலாளரின் ஊதியம்

இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க ஈ) மூலப் பொருட்கள் வாங்க

11. நிகர இலாபம்

அ) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும்

ஆ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்

இ) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும்

ஈ) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்

12. நிதிததகவல்களின் அகப் பயனாளராகக் கருதப்படுபவர் யார்?

அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

13. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும்போது நடவடிக்கைகள் பாதிப்பது

அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் ஆ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில்

இ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள் ஈ) ஒரே கணக்கில் வெவ்வேறு தேதிகளில்

14. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?

அ) காலப் போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) (அ),(ஆ) மற்றும் (இ)

15. ரொக்க ஏடு பதிவு செய்வது

அ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்

ஆ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

இ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்

ஈ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள்

16. இரவி தன்னுடைய வியாபாரத்தை மேம்படுத்துவதற்காக பேரளவில் செலவு செய்த விளம்பரத் தொகை

அ) வருவாயின வரவு ஆ) நீள்பயன் வருவாயினச் செலவு

இ) முதலினச் செலவு ஈ) வருவாயினச் செலவு

17. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது.

அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) இரட்டைத் தன்மை கருத்து

இ) பண மதிப்பீடு கருத்து ஈ) அடக்கவிலை கருத்து

18. TALLY என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.

அ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள்

ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்

இ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

19. இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் _______ காண்பிக்கிறது.

அ) நிதி நிலையினை ஆ) கொள்முதலை

இ) இலாபத்தினை ஈ) விற்பனையை

20. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது

அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்

இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

## பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா)** **7 x 2 = 14**

21. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

22. பேரேடு என்றால் என்ன?

23. நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகை கணக்கிடுக.

இயந்திரத்தின் அடக்கவிலை ₹1,00,000

எதிர்நோக்கும் இறுதி மதிப்பு ₹5,000

எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் 5 ஆண்டுகள்

24. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

அ) குமார் ஆ) பெற்ற கழிவு இ) கட்டடம் ஈ) முதல்

25. ஈடுசெய் பிழைகள் என்றால் என்ன?

26. தனி பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

27. குறிமுறை என்றால் என்ன?

28. விடுபட்ட பகுதிகளை நிரப்புக.

| | *சொத்துகள் ₹* | | *பொறுப்புகள் ₹* | | *முதல் ₹* |
|---|---|---|---|---|---|
| a) | 30,000 | = | 20,000 | + | ? |
| b) | 60,000 | = | ? | + | 35,000 |

29. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினைக் கணக்கிடவும்.

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | மறைமுகச் செலவுகள் | 5,000 |
| கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 | | |

30. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று (₹) | வரவு (₹) |
|---|---|---|---|---|
| | ________ க/கு ப<br>________ க/கு ப<br>(ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது) | | ---- | ---- |

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. கணக்கியலின் முக்கியத்துவம் பற்றி ஏதேனும் மூன்று கூறுக.

32. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்று பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம்பெறுமா எனக் காட்டுக.

1) வெளித்தூக்கு கூலி
2) கூலி
3) வாடகை பெற்றது
4) முதல்
5) விற்பனை
6) விற்பனைத் திருப்பம்

33. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.

34. கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

35. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான காரணங்கள் எவையேனும் மூன்றினைத் தருக.

36. 2019 மே மாதத்திற்கான ராகுல் அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | ₹ |
|---|---|---|
| மே 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 7 | கூலி ரொக்கமாகக் கொடுத்தது | 2,000 |
| 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 9,000 |
| 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 | சம்பளம் கொடுத்தது | 2,500 |

37. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு - வேறுபடுத்தவும்.

38. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | வட்டி பெற்றது | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | வெளித்தூக்குக் கூலி | 2,500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| விளம்பரம் | 4,000 | | |
| தணிக்கைக் கட்டணம் | 1,000 | | |

39. பின்வரும் நடவடிக்கைகளை 2017 டிசம்பர் மாதத்திற்கான, சுரேஷ் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| | | ₹ |
|---|---|---|
| 2017 டிசம்பர் 1 | சுமதியிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 17,800 |
| 4 | இராணிக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,200 |
| 10 | இரகுநாதனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| 21 | சரண்யாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,500 |
| 26 | ஷியாமிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 3,000 |

40. வரவு இருப்பு மட்டுமே காட்டும் கணக்குகளைப் பட்டியலிடுக.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. அ) ஆட்டோ மொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவுசெய்க.

| | | ₹ |
|---|---|---|
| i) | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80,000 |
| ii) | இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| iii) | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 6,000 |
| iv) | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 8,000 |
| v) | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 2,000 |
| vi) | வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது | 500 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| 2018 | | ₹ |
|---|---|---|
| மார்ச் 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டுவந்த ரொக்கம் | 60,000 |
| 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18 | வாடகை செலுத்தியது | 500 |
| 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28 | சொந்த பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

42. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| ஆகஸ்டு 1 | தர்மா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 70,000 |
| 6 | கணேசனிடமிருந்து பெற்ற ரொக்கம் | 10,000 |
| 10 | வாடகை செலுத்தியது | 3,000 |
| 20 | ஆனந்திடமிருந்து பெற்ற கழிவு | 5,000 |

*(அல்லது)*

ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும், வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

43. அ) சுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2017 | | ₹ |
|---|---|---|
| ஜன 1 | கையிருப்பு ரொக்கம் | 42,500 |
| | வங்கியிருப்பு ரொக்கம் | 35,000 |
| 3 | ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை | 15,700 |
| 4 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 11,500 |
| 19 | மின்னணு தீர்வை முறையில் வங்கி நேரடியாகப் பெற்ற பங்காதாயம் | 2,000 |
| 21 | மகேஷ் என்பவருக்கு கொடுக்க வேண்டிய ₹20,000-த்தில் ₹19,700 செலுத்தி கணக்கு தீர்க்கப்பட்டது | |

*(அல்லது)*

ஆ) கீழ்காணும் தகவல்களிலிருந்து திருமதி.ராமசுந்தரி என்பவரின் ஏடுகளில் 2017 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார, இலாபநட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| *பற்றிருப்பு தொகை* | *₹* | *வரவிருப்பு தொகை* | *₹* |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | முதல் | 52,000 |
| கூலி | 2,700 | விற்பனை | 7,000 |
| இயந்திரம் | 52,000 | கடனீந்தோர் | 8,000 |
| கொள்முதல் | 3,300 | பெற்ற தள்ளுபடி | 2,500 |
| சம்பளம் | 2,600 | | |
| வங்கி ரொக்கம் | 6,400 | | |
| | ***69,500*** | | ***69,500*** |

44. அ) பின்வரும் நடவடிக்கைகளை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

| | | ₹ |
|---|---|---|
| i) | சரக்கு விற்பனை வாயிலாக பெற்றது | 75,000 |
| ii) | வங்கியிடமிருந்து பெற்ற கடன் | 2,50,000 |
| iii) | முதலீடுகள் விற்பனை செய்தது | 1,20,000 |
| iv) | கழிவு பெற்றது | 30,000 |
| v) | புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது | 14,000 |

*(அல்லது)*

ஆ) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின்படியான இருப்பினைக் கண்டறியவும்.

i) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது ₹500

ii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது ₹4,000

iii) வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி ₹100

iv) நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை ₹200

v) ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹300

45. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.

ஏப்ரல் 1 காஞ்சிபுரம், பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹180 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 10 சென்னை, இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது
ஒரு மீட்டர் ₹490 வீதம் 60 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹210 வீதம் 50 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 18 நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹510 வீதம் மீட்டர் சில்க் துணி

ஏப்ரல் 20 மதுரை, ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
கட்டு ஒன்று ₹730 வீதம் 50 கட்டுகள் காடாத்துணி
கட்டு ஒன்று ₹650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி

ஏப்ரல் 24 கரூர், மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
சட்டைத் துணிகள் மதிப்பு ₹7,000
சேலைகள் மதிப்பு ₹25,000

*(அல்லது)*

ஆ) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்களை விளக்குக.

46. அ) மோட்டார் வாகனப் பொருட்களை விற்பனை செய்யும் ராஜு என்பவரது ஏடுகளிலிருந்து 2017 மார்ச் 31 ஆம் நாளன்று எடுக்கப்பட்ட கணக்குகளின் பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 5,500 | நேரடிச் செலவுகள் | 5,000 |
| பெற்ற தள்ளுபடி | 300 | வெளித்தூக்குக் கூலி | 3,500 |
| கடனீந்தோர் | 15,000 | முதல் | 45,000 |
| கட்டிடம் | 50,000 | கொள்முதல் | 49,700 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 6,000 | விற்பனை | 59,400 |

*(அல்லது)*

ஆ) இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதவும்.

i) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹2,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

ii) இயந்திரம் ₹3,000 க்கு கொள்முதல் செய்தது, கொள்முதல் ஏட்டில் பதியப்பட்டுள்ளது.

iii) மதிக்கு ₹450-க்கு சரக்கு விற்றது அவரது கணக்கில் ₹540 என எழுதப்பட்டுள்ளது.

iv) கொள்முதல் திருப்ப ஏட்டில் மொத்தம் ₹200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

v) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ₹1,122 பேரேட்டில் ₹1,222 என எழுதப்பட்டுள்ளது.

47. அ) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

| | |
|---|---|
| 1) வங்கி | 2) வெளி ஏற்றிச்செல் செலவு |
| 3) கொள்முதல் | 4) ஹரிஷ் |
| 5) முன்கூட்டி செலுத்திய செலவு | 6) அறைகலன் |
| 7) நற்பெயர் | 8) விற்பனை |
| 9) வட்டி பெற்றது | 10) முதல் |

*(அல்லது)*

ஆ) இலக்குமி போக்குவரத்து நிறுவனம், அக்டோபர் 1, 2014 அன்று ₹8,00,000-க்கு கனரக வாகனம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 15% தேய்மானம் நீக்க வேண்டும். 31 மார்ச் 2017 ல் அக்கனரக வாகனம் ₹5,00,000 க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31 இல் முடிக்க பெறுகின்றன. விற்ற வாகனத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினை கணக்கிடவும்.

******